# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2018 மே மாதம் 08 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

I. தவிசாளரின் அறிவிப்புக்கள்

II. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

III. அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

IV. செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

V. மனுக்கள்

VI. கேள்விகள் / இடைக்கால கேள்விகள்

**01. கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2018.04.03 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)18/09)**

அ. 2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு வருடங்களினுள் மேல் மாகாண சபை பாடசாலைகளில் மாவட்ட ரீதியில் பரீட்சையில் சித்தி பெறாது வருடாந்தம் பாடசாலையை கைவிட்டுச் சென்ற உயர்தர / சாதாரணதர மற்றும் ஏனைய வகுப்புக்களின் பிள்ளைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு ?

ஆ. எதன் காரணமாக அதிகமான பிள்ளைகள் பாடசாலையை விட்டு சென்றுள்ளனர் என கல்வி அதிகாரிகள் இனங்கண்டுள்ளனரா ? அக் காரணம் யாது ?

இ. மேற்கூறிய வருடங்களில் மேல் மாகாண பாடசாலைகளை மாவட்ட ரீதியில் எடுக்குமிடத்து முதலாம் வகுப்பிற்கு சேர்ந்த பிள்ளைகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து உயர் தரம் சித்தியெய்தி உயர் தர கல்விக்கு செல்லும் பிள்ளைகளின் சதவீதம் எவ்வளவு ?

ஈ. இவ்வாறு பாடசாலையைக் கைவிட்டு, பரீட்சையில் சித்தியடையாது செல்லும் பிள்ளைகளை மாகாணத்தின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்ய வைத்து அவர்களின் வாழ்க்கையை சிறப்பாக்கிக் கொள்வதற்குரிய முறை ஒன்றினை தயாரிக்க நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**02. கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2018.04.03 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)18/10)**

அ. மேல் மாகாணத்தின் உள்ளூராட்சித் தாபன மட்டத்தில் அங்கீகரிக்கப்படாத பாரிய அளவான கட்டடங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரியது எனக் குறிப்பிட்டு எந்தவொரு அங்கீகாரமுமின்றி மாகாணம் முழுவதும் நிர்மாணிக்கப்படுகின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. சில உள்ளூராட்சித் தாபனங்கள் இப் பாரிய அளவான கட்டடங்கள் தமது விடயப் பரப்பிற்கு உரித்தானவை அல்ல என்ற கருத்தில் இருப்பதுடன் இது தொடர்பாக எந்தவொரு ஆராய்ந்து பார்க்கும் நடவடிக்கையினையும் மேற்கொள்வதில்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அவ்வாறான நிர்மாணங்கள் தொடர்பாக சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக நீங்கள் உள்ளூராட்சித் தாபனங்களுக்கு வழிகாட்டல்களை பெற்றுக் கொடுப்பீர்களா ?

ஈ. தற்போது இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ள பாரிய அளவான நிர்மாணங்கள் தொடர்பான தகவல் உள்ளிட்ட அறிக்கை ஒன்றினை உள்ளூராட்சித் தாபனங்கள் மூலம் பெற்றுக் கொள்ள நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**03.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் விவசாய, காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்குற்பத்தி சுகாதாராம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2018.04.03 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)18/11)**

அ. மேல் மாகாண வயல்களில் இருந்து கிடைக்கும் விளைச்சல்களில் எத்தனை சதவீதமானது மேல் மாகாண மக்களின் பயன்பாட்டிற்காக பங்களிப்பு செய்கின்றது ?

ஆ. மேல் மாகாண மக்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக போதிய அளவான விளைச்சலைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் செய்கை பண்ண வேண்டிய வயல்கள் எத்தனை ஹெக்டயார்கள் ஆகும் ?

இ. மேல் மாகாணத்தினுள் இவ் வேளையில் செய்கை செய்யப்படாத தரிசு நிலங்கள் எத்தனை ஹெக்டயார்கள் உள்ளன ?

ஈ. பல வருடங்கள் தொடக்கம் பாழடைந்து காணப்படும் தரிசு நிலங்களை பிரதேச மக்களின் உணவு தேவைக்காக பயன்படுத்துவதற்கு ஏற்ற முறையில் வளப்படுத்த நீங்கள் முன்வைக்கும் முறை யாது ?

உ. மேல் மாகாணமானது இந் நாட்டிற்கு முன் மாதிரியான மாகாணம் ஒன்றாக அறிமுகப்படுத்தி தற்போது மாகாணத்தினுள் உள்ள வளங்களைப் பயன்படுத்தி உணவில் தன்னிறைவு பெற்ற மாகாணம் ஒன்றாக மேல் மாகாணத்தை மாற்றுவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ சுசில் கிந்தெல்பிடிய உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் 2018.04.03 ஆந் திகதி சபை ஒத்திவைக்கும் வேளையில் கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)18/ADG 01)**

அ. 2017, 2018 ஆகிய இரண்டு வருடங்களில் மாகாண சுகாதார அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்கள் யாவை ? ஒவ்வொரு பதவிகளுக்குமான எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அமைய மற்றும் தற்காலிக சுகாதார உதவிப் பணியாளர்களாக 2017 இல் மாகாண வைத்தியசாலைகளுக்காக எத்தனை ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன ? ஆட்சேர்க்கப்பட்ட அடிப்படையினை தெளிவுபடுத்துவீர்களா ?

இ. 2018 ஆம் ஆண்டில் மாகாண வைத்தியசாலைச் சேவைக்காக இன்னும் சுகாதார பணி உதவியாளர்களை ஆட்சேர்ப்பீர்களா ? அவர்கள் எத்தனை பேர் ? எதன் அடிப்படையில் ஆட்சேர்ப்பீர்கள் ?

ஈ. தற்காலிக சேவைக்கு ஆட்களை ஆட்சேர்த்துக் கொண்டு கடமையில் ஈடுபடுத்தியிருக்கின்ற வேளையில் நிரந்தர சேவைக்காக சுகாதார உதவிப் பணியாளர்களை ஆட்சேர்ப்பீர்களா ?

**05.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/12)**

அ. கம்பஹா வலயக் காரியாலயத்தில் பெயர் பெற்ற பாடசாலை ஒன்றாக காணப்பட்ட மேமா/ கம்/யக்கல சந்திரஜோதி வித்தியாலயத்தின் நிருவாகம் சீர்குலைந்ததன் காரணமாக பல பிரச்சினைகள் தோன்றியுள்ளன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இப் பாடசாலை அதிபருக்கு சினேகமான பல ஆசிரியர்களின் நடவடிக்கைகள் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை மற்றும் பிற செயற்பாடுகளுக்கு தாக்கத்தினை ஏற்படுத்த காரணமாகியுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. அப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் ஒழுங்கான முறையில் அந்தந்த விடயங்களில் ஈடுபடுத்துவதற்குப் பதிலாக தமது சினேகமான ஆசிரியர்களுடன் பயணற்ற முறையில் காலத்தைக் கழிக்கின்றனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. அப் பாடசாலையின் நிருவாகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை என்னவென்று சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை அதேபோல் வெளிவாரி செயற்பாடுகளை ஒழுங்கான முறையில் மேற்கொள்வதற்காக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது எனவும் இப் பாடசாலையின் ஒழுக்கத்தினை ஒழுங்கான முறையில் பேணிச் செல்ல நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதனையும் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**06. கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு : (Ïæ/vi (1)18/13)**

அ. வத்தளை பிரதேச செயலாளர் பிரிவின் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேமா/கள/ஹீன்கெந்த ஆரம்ப பாடசாலைக்கு முன்னால் கான் தொகுதி ஒன்று கட்டப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அக் கான் தொகுதியினைக் கட்டிய ஒப்பந்தக் காரர் யார் ? எவ்வளவு நிதி அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

இ. அந்த கருத்திட்டத்தினை பூர்த்தி செய்யும் போது ஒழுங்கான முறையில் பூர்த்தி செய்யாத படியால் அருகில் உள்ள பாடசாலைப் பிள்ளைகள் இடர்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. அவ்வாறு ஒழுங்கற்ற முறையில் கட்டிய உரிய ஒப்பந்தக்காரருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதனையும், அக் கான் தொகுதியினை ஒழுங்கான முறையில் கட்ட நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதனையும் சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**07. கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு : (Ïæ/vi (1)18/14)**

அ. ம/ப கொச்சிகடை கூட்டுறவு கடன் வழங்கும் நகர வங்கியினால் 2008 ஆம் ஆண்டளவில் தரத்திற்கு இணங்காத முறையில் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. பொறியியல் தொழிநுட்பத் தாபனத்தின் அறிக்கையின் மூலம் அக் கட்டடமானது தரமற்ற கட்டடம் ஒன்று என அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தின் இல 47/1 இன் கீழ் 2008.07.02 ஆந் திகதி அப் போதைய கிரிந்திவெல ஹிஸ்வெல்ல தங்கதெனிய இலக்கம் 109 ஆம் இலக்க இடத்தில் வசித்த கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் திரு. ஆர்.கே சுமணரத்ன அவர்களினால் உரிய சங்கக் கட்டடத்தினை நிர்மாணித்த போது மேற்கொண்ட முறைகேடு மற்றும் முறையற்ற நிதிப் பாவனை தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. திரு. ஆர்.கே. சுமணரத்ன அவர்களின் விசாரணை அறிக்கையினை சபைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பீர்களா ?

உ. உரிய கட்டடத்தினை நிர்மாணிக்கும் போது நிகழ்ந்த முறைகேடு மற்றும் முறையற்ற நிதி பாவனை தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுக்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க எவ்வாறான செயற்பாடுகளை கடைபிடிப்பீர்கள் என்பதனை நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

## VII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## VIII. சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான தகவல்கள்

## IX. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும் / சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான பதில்கள்

## X. பொது நடவடிக்கை

**01.** **இசுர தேவப்பிரிய கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை :**

**<u>கொழும்பு மாநகர சபையின் அதிகார பிரதேசத்தின் கழிவகற்றல் அமைப்பு முறை தொடர்பான துணை விதிகள்</u>**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள் ) 2 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அதிகாரமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க அங்கீகரிக்கப்பட்ட,

கொழும்பு மாநகர சபையினால் 252 ஆவது அதிகாரமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்டு கொழும்பு மாநகர சபை அதிகார பிரதேசத்தின் கழிவகற்றல் அமைப்பு முறை தொடர்பான துணை விதிகள் என்ற பெயர் கொண்ட துணை விதிகள்,

மேற் கூறப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) 2 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அதிகாரமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட வேண்டும் என மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது என்ற பிரேரணையை தெரிவித்து இம் மாகாண சபைக்கு முன்வைக்கின்றேன்.

## XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01.** **கௌரவ ரோஸ் பிரணாந்து அவர்கள்**

இந் நாட்டின் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சட்டத்திற்கு இணங்க நடைமுறைப் படுத்தப்படும் ஏதாவது நீதி மன்றம் ஒன்றின் நீதிமன்ற அதிகார பிரதேசம் நீதிமன்றங்கள் ஒழுங்கு படுத்தல் சட்டத்தின் இரண்டாவது (2) பிரிவிற்கு இணங்க நீதிச் சேவை ஆணைக்குழுச் சபை மற்றும் உயர் நீதிமன்ற தலைவரிடம் வினவி நீதி அமைச்சரினால் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படல் வேண்டும். அவ்வாறான நீதி ஏற்பாடுகள் காணப்பட்ட போதும் தற்போது காணப்படும் நீதி மன்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும் முறை மற்றும் அவற்றினால் ஏற்படும் பிரயோக ரீதியான பிரச்சினை தொடர்பாக ஒழுங்கான தெளிவு உள்ள மேற்கூறப்பட்ட நபர்கள் மற்றும் தாபனங்களிடமிருந்து தொடர்ச்சியாக பெறப்படுகின்றது. எனினும் அண்மையில் நீதிமன்ற அதிகார எல்லைக்குரிய அதிகார பிரசேத்தினை தீர்மானிக்கும் போது ஒழுங்கான முறை ஒன்றினை கடைபிடிக்காது நடவடிக்கை எடுத்த சந்தர்ப்பங்களைக் காணக் கூடியதாக உள்ளது. எனவே நீதி மன்றத் துறை தொடர்பாக மக்களிடம் காணப்படும் நம்பிக்கை அதிகரிக்குமாறு அந்த எல்லா அதிகார எல்லைகளையும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி ஏதாவது தவறு ஒன்று நிகழ்ந்திருந்தால் அத் தவறினை சட்டரீதியான அமைப்பினூடாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இம் மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi(1)17/12)**

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2018.04.18** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.